பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

04 04 2026 SATURDAY 7 15 AM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தல் சுதந்திரமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

2. கேரளம் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைய இன்னும் நான்கு நாட்களே உள்ள நிலையில், அம்மாநிலத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்

3. நாட்டின் தற்காப்பு திறனை வலுப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பு துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

4. ஈரானின் அணுசக்தி உள்கட்டமைப்புகள் மீது நடத்தப்பட்ட ராணுவத் தாக்குதல்களை கண்டிக்க சர்வதேச அணுசக்தி முகமை தவறிவிட்டதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது

5. IPL கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தில்லி அணி - மும்பை அணியையும் குஜராத் அணி - ராஜஸ்தான் அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>>><<<<<

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தல் சுதந்திரமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம், மாநில தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், வாக்காளர்கள் அச்சமுமின்றி வாக்களிக்கத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவின் போது வன்முறை, மிரட்டல் மற்றும் தூண்டுதல் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடிகளை கைப்பற்றுதல் போன்ற சட்டவிரோதச் செயல்கள் இன்றி அமைதியான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் தேர்தல் அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மாநிலத்தில் பதற்றமான பகுதிகளில் கூடுதல் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறும் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

>>>>><<<<<

மேற்குவங்க மாநிலம் மால்டாவில் B.D.O. அலுவலகம் முற்றுகையிடப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய முக்கியக் குற்றவாளிகளான திரு. மொபாக்கருல் இஸ்லாம் மற்றும் திரு. அக்ரமுல் பாகானி ஆகியோரை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, திரு. மொபாக்கருல் இஸ்லாமிற்கு 14 நாட்கள் காவலும், திரு. அக்ரமுல் பாகானிக்கு 6 நாட்கள் காவலும் விதிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பது தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்ட கும்பலைத் தூண்டிவிட்டதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின் போது, ஒன்பது மணி நேரத்திற்கும் மேலாக நீதித்துறை அதிகாரிகள் அலுவலகத்திற்குள்ளேயே சிறை வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த 40 பேர் கொண்ட தேசிய புலனாய்வு முகமை குழுவினர் மால்டா மாவட்டத்திற்கு வந்துள்ளனர்.

மத்தியப் படையினர் அதிகாரிகளை மீட்க முயன்றபோது அவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்தும் என்.ஐ.ஏ அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

முதற்கட்டமாக மோதாபரி காவல் நிலையத்திற்குச் சென்ற புலனாய்வுக் குழுவினர், பாதிக்கப்பட்ட B.D.O. அலுவலகத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

>>>>><<<<<

கேரளம் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைய இன்னும் நான்கு நாட்களே உள்ள நிலையில், அம்மாநிலத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, இன்று பிற்பகல் 3 மணி அளவில் திருவல்லாவில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

இதனைத் தொடர்ந்து, திருவனந்தபுரம் செல்லும் அவர், கிள்ளிப்பாலத்திலிருந்து கரமனை வரை நடைபெறும் வாகனப் பேரணியில் பங்கேற்கிறார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ராகுல் காந்தி, இன்று ஆலப்புழாவில் நடைபெறும் ஐக்கிய ஜனநாயக முன்னணி தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொள்கிறார்.

அதனைத் தொடர்ந்து கொச்சி மற்றும் குன்னத்துநாடு ஆகிய பகுதிகளிலும் அவர் பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார்.

இதேபோல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. எம்.ஏ. பேபி, இன்று கோட்டயத்தில் இடதுசாரி ஜனநாயக முன்னணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்குச் சேகரிக்கிறார்.

மத்திய அமைச்சர்களும், பல்வேறு மாநில முதலமைச்சர்கள் மற்றும் தேசியத் தலைவர்களும் கேரளாவில் முகாமிட்டு பொதுக்கூட்டங்கள் மற்றும் பேரணிகளில் கலந்து கொண்டு, தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<<

நாட்டின் தற்காப்பு திறனை வலுப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பு துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

விசாகப்பட்டினத்தில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆய்வகத்தில், புதிய தொழில்நுட்ப வசதிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

இந்த வசதி, போர்க் கப்பல்களை சிறப்பாக வடிவமைக்கவும், சோதனை செய்யவும் வழிவகுக்கும் என்று அவர் கூறினார்.

இதன் மூலம், வெளிநாட்டு உள்கட்டமைப்புகளை சார்ந்திருப்பது பெருமளவு குறையும் என்று அவர் தெரிவித்தார்.

நீர்மூழ்கி கப்பல்கள் மற்றும் போர்க் கப்பல்களின் வேகத்தை அதிகரிக்கவும், அவற்றின் சப்தத்தை குறைத்து, எதிரிகளிடம் சிக்காமல் மறைந்து செல்லும் திறனை மேம்படுத்த, இந்த புதிய வசதி உதவும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>>><<<<<

நாட்டில் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் தேவையின்றி பெட்ரோல், டீசலை அதிக அளவில் வாங்கிச் சேமிப்பதையோ அல்லது அவசியமின்றி சமையல் எரிவாயு சிலிண்டர்களை முன்பதிவு செய்வதையோ தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, இந்தியன் ஆயில் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தினசரி சுமார் 28 லட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஹார்முஸ் நீரிணைப் பகுதியில் கப்பல்கள் மீது ஈரான் நடத்தும் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க, தற்காப்புப் படைகளைப் பயன்படுத்துவது குறித்த வாக்கெடுப்பை ஐநா பாதுகாப்பு கவுன்சில் ஒத்திவைத்துள்ளது.

பஹ்ரைன் நாடு கொண்டு வந்த இந்த வரைவு தீர்மானத்தின் மீது, 15 நாடுகளைக் கொண்ட பாதுகாப்பு கவுன்சில் நேற்று வாக்களிக்கத் திட்டமிட்டிருந்தது.

இருப்பினும், புனித வெள்ளியை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபைக்கு பொது விடுமுறை என்பதால், இந்த வாக்கெடுப்பு பின்னர் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்திற்கான ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் தலைமைப் பொறுப்பை வளைகுடா நாடான பஹ்ரைன் வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

ஈரானின் அணுசக்தி உள்கட்டமைப்புகள் மீது நடத்தப்பட்ட ராணுவத் தாக்குதல்களை கண்டிக்க சர்வதேச அணுசக்தி முகமை தவறிவிட்டதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து ஈரான் அணுசக்தி அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில். ஈரான் மீது சமீபத்தில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களை கண்டிக்க சர்வதேச அணுசக்தி முகமை மறுத்து வருவதாக கூறியுள்ளது.

இந்த நடவடிக்கை, தாக்குதல் நடத்தியவர்களுக்கு அந்த அமைப்பு உடந்தையாக இருப்பதையே காட்டுகிறது என்றும் ஈரான் அணுசக்தி அமைப்பின் தலைவர் திரு. முகமது இஸ்லாமி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

அபுதாபியின் முக்கியமான எரிசக்தி மையமான ஹப்ஷன் எரிவாயு வளாகத்தில் நேற்று இரண்டு இடங்களில் தீ விபத்து ஏற்பட்டது.

விமானப் படையினரால் இடைமறித்துத் தாக்கப்பட்ட ஏவுகணைகளின் சிதறல்கள், இந்த வளாகத்தில் விழுந்ததே இந்த தீ விபத்திற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தின் போது பணியாளர்களை வெளியேற்றும் பணியின் போது, எகிப்து நாட்டைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். மேலும் நான்கு பேர் காயமடைந்தனர்.

>>>>><<<<<

மணிப்பூர் மாநிலத்தில் தடை செய்யப்பட்ட இயக்கங்களைச் சேர்ந்த நான்கு தீவிரவாதிகளை பாதுகாப்புப் படையினர் நேற்று கைது செய்தனர்.

மியான்மர் நாட்டுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் தெங்னௌபால் மாவட்டத்தில் உள்ள யாங்கோபுங் கிராமத்தில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மோரே காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் பதுங்கியிருந்த இவர்களை காவல்துறையினரும் பாதுகாப்புப் படையினரும் இணைந்து கைது செய்தனர்.

இவர்கள் பொதுமக்களிடமும், அரசு ஊழியர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் வணிகர்களிடமும் கட்டாயப் பணவசூலில் ஈடுபட்டு வந்ததாகவும், ஆள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோதச் செயல்களில் தொடர்புடையவர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<<

ஆப்கானிஸ்தானின் இந்துகுஷ் மலைப்பகுதியில் நேரிட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் காரணமாக, எட்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் மையப்பகுதியில் நேற்று இரவு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவையில 5 புள்ளி எட்டாக பதிவாகியுள்ளது.

ஜெர்மன் புவி அறிவியல் ஆய்வு மையத்தின் தகவல்படி, இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 181 கிலோமீட்டர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது.

இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் அண்டை நாடான பாகிஸ்தான் மட்டுமின்றி, இந்தியாவின் வட மாநிலங்களிலும் உணரப்பட்டது.

தலைநகர் தில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இரவு 9.50 மணி அளவில் இந்த அதிர்வுகள் பதிவாகின.

மேலும், பஞ்சாபின் லூதியானா, சண்டிகர், உத்தரகாண்டின் டேராடூன் மற்றும் ஜம்மு-காஷ்மீரின் ஸ்ரீநகர், பூஞ்ச், உதம்பூர் உள்ளிட்ட பல நகரங்களில் நில அதிர்வு உணரப்பட்டதால் பொதுமக்கள் அச்சமடைந்து வீடுகளை விட்டு வெளியேறினர்.

>>>>><<<<<<

IPL கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தில்லி அணி - மும்பை அணியையும், குஜராத் அணி - ராஜஸ்தான் அணியையும் எதிர்கொள்கின்றன.

தில்லியில் இன்று மாலை மணி 3.30-மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் தில்லி - மும்பை அணிளும், இரவு மணி 7.30-க்கு அஹமதாபாதில் நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் குஜராத் - ராஜஸ்தான் அணிகளும் மோதுகின்றன.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், பஞ்சாப் அணி, 5 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

முதலில் விளையாடிய சென்னை நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 209 ரன் எடுத்தது.

210 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் விளையாடிய பஞ்சாப் அணி, 18 புள்ளி நான்கு ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

>>>>>END<<<<<<